அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 04.06.2022** | **பக்கங்கள்: 16** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. சேய், குழவி, மழலை என்பவற்றைக் குறிக்கும் சொல்
    1. நண்பன்
    2. குழந்தை
    3. தாய்
    4. தங்கை

2. உணர்ச்சியை வெளிப்படுத்தும்போது பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறி
    1. அடைப்புக்குறி
    2. காற்புள்ளி
    3. வியப்புக்குறி
    4. முக்காற்புள்ளி

3. பெரிய செம்பைத் தலையில் வைத்துத் தாளத்திற்கும் பாடலுக்கும் ஏற்ப ஆடுவது
    1. கரகம்
    2. கோலாட்டம்
    3. கும்மி
    4. காவடி

4. எடுக்கிறாள் என்பதன் பிறவினை வடிவம்
    1. எடுப்பாள்
    2. எடுத்தாள்
    3. எடுப்பிக்கிறாள்
    4. எடுக்கவில்லை

5. பிரித்தானியரை எதிர்த்துப் போராடிய வன்னி மன்னன்
    1. எல்லாளன்
    2. பண்டாரவன்னியன்
    3. சங்கிலியன்
    4. கயிலைவன்னியன்

6. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
    1. திருக்குறள்
    2. மூதுரை
    3. சிலப்பதிகாரம்
    4. அகநானூறு

7. நிலா வீட்டு வேலைகளை மளமள என்று செய்தாள். மளமள என்பது
    1. இணைமொழி
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்குத்தொடர்
    4. அடுக்கிடுக்குத்தொடர்

1 2 3 4

8. அவன் பாடுவதில் வல்லவன். இதில் வல்லவன் என்பது
   1. வினையாலணையும் பெயர்
   2. வியங்கோள் வினைமுற்று
   3. குறிப்பு வினைமுற்று
   4. ஏவல் வினைமுற்று

9. புறாவுக்காகத் தன் தசையை வெட்டிக் கொடுத்த மன்னன்
   1. சிபி
   2. குமணன்
   3. பேகன்
   4. பாரி

10. கணினி செயற்படுவதற்கு அடித்தளமாக அமைவது
   1. செயலி
   2. மொழி
   3. இணையம்
   4. ஒளியுணரி

11. காகம் கரையும். அதுபோல மயில்
   1. அகவும்
   2. குறுகுறுக்கும்
   3. அலறும்
   4. கத்தும்

12. ஈழத்தமிழரான சசிகரன் என்பவரால் உருவாக்கப்பட்ட எழுத்துரு
   1. நல்லூர்
   2. பாமினி
   3. மயிலை
   4. லதா

13. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பன
   1. கூலங்கள்
   2. ஆனைந்து
   3. முழவுகள்
   4. நிலைத்திணைகள்

14. எம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளப் பழக வேண்டும். இதற்குப் பொருத்தமான உவமைத்தொடர்
   1. கல்லினுள் தேரை போல
   2. உடுக்கை இழந்தவன் கை போல
   3. மழை காணாப் பயிர் போல
   4. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல

15. புதுவை இரத்தினதுரை அவர்கள் தேர்ச்சிறப்க் கலைஞன். இதில் கலைஞன் என்பது
    1. பெயர்ப்பகுசொல்
    2. வினைப்பகுசொல்
    3. பெயர்ப்பகாச்சொல்
    4. இடைப்பகாச்சொல்

16. மரம் + செடி என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. மரச்செடி
    2. மரம்செடி
    3. மரங்செடி
    4. மரஞ்செடி

17. ஈழத்தில் சோழர் ஆட்சியின்போது தலைநகரமாக இருந்தது
    1. அநுராதபுரம்
    2. பொலநறுவை
    3. கண்டி
    4. யாழ்ப்பாணம்

18. மயங்கினான் என்பதில் வந்துள்ள இடைநிலை
    1. ஆன்
    2. இன்
    3. ன்
    4. ங்

19. கோவலனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தவன்
    1. மாநாய்கன்
    2. மாசாத்துவான்
    3. பாண்டிய மன்னன்
    4. பொற்கொல்லன்

20. யாருடனும் பேசாமல் இருந்தான். இதில் பேசாமல் என்பது
    1. எதிர்மறைப் பெயரெச்சம்
    2. எதிர்மறை வினைமுற்று
    3. எதிர்மறை வினையெச்சம்
    4. இணைப்பிடைச்சொல்

21. உள்ளத்தாமரையே இறைவன் விரும்பும் இன்மலர் ஆகும். இதில் உருவக அணியாக வருவது
    1. இறைவன்
    2. உள்ளத்தாமரை
    3. விரும்பும்
    4. இன்மலர்

1 2 3 4

22. பொருட்செலவு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. பொருட் + செலவு
    2. பொருல் + செலவு
    3. பொருழ் + செலவு
    4. பொருள் + செலவு

23. எறும்பூரக் கற்குழியும் என்ற பழமொழியின் பொருள்
    1. நிறைவடையா மனம்
    2. விடாமுயற்சி பயன் தரும்
    3. நல்லோரின் சேர்க்கை நன்மை தரும்
    4. நன்றி மறவாது இருத்தல்

24. மயில்வாகனப் புலவர் எழுதிய நூலின் பெயர்
    1. திருக்குறள்
    2. ஆத்திசூடி
    3. யாழ்ப்பாண வைபவமாலை
    4. நன்னூல்

25. மழலைமொழி கேட்ட தாய் கழிபேருவகை அடைந்தார். கழி என்பது
    1. இடைச்சொல்
    2. வினைச்சொல்
    3. உரிச்சொல்
    4. வினாச்சொல்

(25 x 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. செய்ந்நன்றி: ______________________________

______________________________

2. எரிபொருள்: ______________________________

______________________________

3. கல்வெட்டு: ______________________________

______________________________

(3 x 2 = 6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சிறந்த மாந்த விழுமியப் பண்புகள் இரண்டு எழுதுக.

________________________________________

________________________________________

2. "கண்ணீருடன் என் முன் வந்திருப்பவளே! நீ யார்?" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

________________________________________

________________________________________

3. போர்த்துக்கேயர் ஈழத்திற்கு வரும்போது தமிழர் தேசத்தில் இருந்த அரசுகள் எவை?

________________________________________

________________________________________

4. உலகமயமாதலினால் ஏற்படும் நன்மைகள் இரண்டு எழுதுக.

________________________________________

________________________________________

5. இலக்கியவகையால் சொற்பாகுபாடுகளுள் இரண்டினை எழுதுக.

________________________________________

________________________________________

6. செய்வினை, செயப்பாட்டுவினை என்பவற்றிற்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

செய்வினை: ________________________________

செயப்பாட்டுவினை: ________________________________

7. அன்பில் உயர்ந்தோர் பெற்றோர். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபையும் பொருளையும் எழுதுக.

உருபு: ____________________ பொருள்: ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நல்ல தமிழ்ப்பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள்
நானொரு தமிழனென்று அடையாளம் காட்டுங்கள்
சொல்லி அழைக்கும்போதே இனவுணர்வை ஊட்டுங்கள்
சுவைத்தேன் தமிழிசை யாழினை மீட்டுங்கள்
தாய்ப்பாலுடன் தமிழ்ப் பாலையே புகட்டுங்கள்
தமிழச்சி பெற்ற பிள்ளை இவளெனக் காட்டுங்கள்
வாயினிக்கத் தமிழ்ப் பெயரிட்டே அழையுங்கள்
வரலாறு படைத்த தமிழ்க் கல்வியை அளியுங்கள்
பிறமொழிக் கலப்படப் பேச்சைக் கைவிடுங்கள்
பிழையின்றித் தமிழையே பேசிப் பழகுங்கள்
அறநூல் திருக்குறளை படித்திடச் செய்யுங்கள்
அறிவுள்ள பிள்ளையாக்கி அவையின் முன் நிறுத்துங்கள்

- கவிஞர் நா. முத்துக்கூத்தன்

1. பிள்ளைக்கு எப்பெயரைச் சூட்ட வேண்டும்?

______________________________

2. யாரென்று அடையாளம் காட்ட வேண்டும்?

______________________________

3. எதனைக் கைவிட வேண்டும்?

______________________________

4. பிள்ளைக்கு எந்த உணர்வை ஊட்ட வேண்டும்?

______________________________

(4 X 1 = 4 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

1. The sky turns yellow at sunreise.
2. Humans destroy forests for their own needs.
3. We must never forget the help that someone has done to us.
4. People would like to live a war-free life.
5. Tamil youths are brilliant in science and linguistics.

**யேர்மனி:**

1. Wenn die Sonne aufgeht, strahlt der Himmel gelb.
2. Die Menschen zerstören die Wälder für ihre Zwecke.
3. Wir dürfen niemals die geleistete Hilfe einer Person vergessen.
4. Die Menschen wollen gerne ein Leben ohne Krieg leben.
5. Die tamilischen Jugendlichen gelten in der Naturwissenschaft und Sprachwissenschaft als hervorragend.

**நோர்வே:**

1. Ved soloppgang blir himmelen gul.
2. Mennesker ødelegger skogene for deres egne behov.
3. Vi må aldri glemme hjelpen vi har fått fra andre.
4. Folk ønsker å leve et liv uten krig.
5. Tamilsk ungdom er flinke i vitenskap, språk og lignende.

**இத்தாலி:**

1. Quando il sole sorge il cielo appare di colore giallo.
2. Gli uomini distruggono le foreste per i loro bisogni.
3. Non dobbiamo mai dimenticarci dell’aiuto che qualcuno ci fa.
4. Le persone preferiscono vivere una vita senza guerra.
5. I giovani Tamil eccellono in ambiti come scienza e linguistica.

**நெதர்லாந்து:**

1. De lucht wordt geel als de zon opkomt.
2. Men vernietigt de bossen voor hun behoeftes.
3. we mogen nooit de hulp van een ander vergeten.
4. mensen willen oorlogsvrij leven leiden
5. De Tamils jongeren doen het uitstekend in technologie en taalkunde .

**டென்மார்க்:**

1. Når solen står op, er himlen gul.
2. Menneskene ødelægger træerne for deres egne behov.
3. Vi må aldrig glemme den, der engang har hjulpet os.
4. Menneskene ønsker at leve et liv uden krig.
5. Tamilske unge er god til videnskab og sprog.

**சுவீடன்:**

1. När solen går upp ser himmlen gul ut.
2. Människan hugger ner  exploterar skog för sina behov.
3. Vi får aldrig glömma den hjälp vi har fått av någon.
4. Människor  skulle vilja leva ett liv utan krig.
5. Unga tamiler är duktigainom naturvetenskap och språkvetenskap.

**பின்லாந்து:**

1. Kun aurinko nousee, taivas näyttää keltaiselta.
2. Ihmiset tuhoavat metsiä omien tarpeiden vuoksi.
3. Emme voi unohtaa henkilöä, joka auttoi meitä.
4. Ihmiset haluavat elää ilman sotaa.
5. Tamilinuoret ovat erittäin hyviä luonnontieteissä ja kielitieteissä

**தமிழ்:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**6. பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் ஆடற்கலை
2. கணினியும் தமிழும்
3. வாழிடநாட்டில் தமிழ் வளர்ச்சி

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- வாழிடமொழியும் தாய்மொழியும்
- தாய்மொழிக் கல்வியால் அடையும் பயன்கள்
- தமிழ்மொழி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வழிகள்

(15 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தனிநாயகம் அடிகளார் அவர்கள் ஈழத்துத் தமிழறிஞர். தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றோடு இலத்தீன், யேர்மன், பிரெஞ்சு, இத்தாலி போன்ற ஐரோப்பிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுப் பன்மொழிப் புலமையாளராகத் திகழ்ந்தார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் ஆராய்ச்சி முயற்சிகள் தளிர்விடத் தொடங்கின. தனிநாயகம் அடிகளாரும் அதில் ஈடுபட்டார். தமிழ் இலக்கிய இலக்கணங்களோடு தமிழரது கலைகள், வணிகத் தொடர்புகள், வாழ்க்கை நிலை என்பனவும் ஆராயப்பட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். அவரது இலக்கியக் கட்டுரைகளின் முதல் தொகுப்பு 'தமிழ்த்தூது' என்பதாகும். அவர் தமிழ்மொழி சார்ந்த ஆராய்ச்சிகள் பிறமொழிகளிலும் குறிப்பாக ஆங்கிலத்திலும் பதிவாக வேண்டுமென்பதைத் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அவர் உலகத் தமிழ் அறிஞர்களைக் கொண்ட அமைப்பு ஒன்றினை நிறுவத் திட்டமிட்டு, அதில் வெற்றியும் கண்டார். அவரது அரிய முயற்சியால் 'தமிழாராய்ச்சி மன்றம்' 1964ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இம்மன்றம், தொடர்ச்சியாக இதுவரை பத்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை வெவ்வேறு நாடுகளில் நடத்தியுள்ளது. தனிநாயகம் அடிகளார் தொடக்கிவைத்த இப்பணி அவரது மறைவுக்குப் பின்னும் இன்றுவரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

1. தனிநாயகம் அடிகளார் தேர்ச்சி பெற்றிருந்த மொழிகளுள் நான்கு எழுதுக.

   ______________________________

2. அவரது குறிக்கோள் என்ன?

   ______________________________

   ______________________________

3. அவர் இலக்கிய இலக்கணத்தோடு எவற்றை ஆராய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்?

   ______________________________

4. 'தமிழ்த்தூது' என்பது யாது?

   ______________________________

5. இதுவரை எத்தனை தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன? அவற்றை நடத்தியது எது?

   ______________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. விளம்பரத்தை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

**புலம்பெயர் சூழலில் வாழும் தமிழ் உறவுகளே!**

உங்களின் திருமண விழாக்கள், பிறந்தநாள், திருமணநாள் போன்றவற்றின் வாழ்த்துகளைப் பதிவேற்ற விரும்புகிறீர்களா? இதோ உங்களுக்கோர் அரிய வாய்ப்பு! நீங்கள் குறைந்த கட்டணத்தில் விளம்பரமாக எங்கள் வளவன் இணையத்தில் பதிவேற்றலாம். உங்கள் பதிவுகள் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டுப் பதிவேற்றப்படும். இதன் மூலம் கிடைக்கும் பணம் தாயகத்தில் வாழும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படும்.

**தொலைபேசி:** 0047 924 42 28

**மின்னஞ்சல்:** valavan22@gmail.com

1. புலம்பெயர் சூழலில் வாழும் தமிழ் உறவுகளுக்கான விளம்பரம் இது. ( )
2. இணையத்தின் பெயர் பாரதிதாசன். ( )
3. பதிவுகளை உங்கள் விருப்பப்படி வடிவமைத்துப் பதிவேற்றலாம். ( )
4. விளம்பரத்தில் திருமணவிழாக்களைப் பதிவிட முடியாது. ( )
5. கிடைக்கும் பணம் தாயக மாணவரின் கல்விக்குப் பயன்படுத்தப்படும். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |